# வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் மெட்ரோ ரெயில் ஜனவரியில் ஓடும்

## இந்த மாதம் இறுதியில் சோதனை ஓட்டம்

சென்னை, டிச. 10- வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் மெட்ரோ ரெயில் வழித்தடத்தில் வருகிற ஜனவரி மாதம் மெட்ரோ ரெயில்ஓடும் என தெரிகிறது. இந்த மாதம் இறுதியில் சோதனை ஓட்டம் நடை பெறுகிறது.

### மெட்ரோ ரெயில்

சென்னை மாநகர போக்கு வரத்து நெருக்கடியை குறைப் பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது.

முதல் கட்டமாக விமான நிலையம் - வண்ணாரப் பேட்டை பரங்கிமலை- சென்ட்ரல் இடையே மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை நடந்து வருகிறது.

பயணிகள் - பொது மக்கள் வரவேற்பை தொடர்ந்து வண்ணாரப்பேட்டை - விம்கோ நகருக்கு 9 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 2 சுரங்க ரெயில் நிலையங்களும் 6 உயர்மட்ட ரெயில் நிலையங்களும் அமைக்கப்பட்டது. தற்போது மின்சார கேபிள்கள், தொலை தொடர்பு சிக்னல் கருவிகள் அமைக்கும் பணி கள் நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

### ஜனவரியில் ஓடும்

வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் மெட்ரோ ரெயில் பணிகள் பெருமளவு முடிந்துவிட்டது. தற்போது மின் கேபிள்கள், சிக்னல்கள் அமைக்கும் பணிகள் நடை பெற்று வருகிறது.

டிசம்பர் மாதம் இறுதியில் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடைபெறும். அதைத் தொடர்ந்து ஜனவரி மாதம் மெட்ரோ ரெயில் சேவை தொடங்க திட்டமிடப்பட் டுள்ளது.

மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடை பெற்ற பிறகு பாதுகாப்பு ஆணையரின் ஆய்வுக்குப் பின் ரெயில்கள் இயக்கப் படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### விம்கோநகர் - விமான நிலையம்

வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் மெட்ரோ ரெயில் வழித்தடத்தில் மெட்ரோ ரெயில் இயக்கப் பட்டதும் பயணிகள் நேரடி யாக விம்கோநகர் - விமான நிலையத்துக்கு 32 கிலோ மீட்டர் தூரத்தை எளிதில் கடக்க முடியும். இதனால் பொது மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள்.